OS.No. 428/2021 – 3.12.2024

PW1 – இளவரசி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ரூ.6,00,000/–ஐ என் கணவர் பிரதிவாதியிடம் முன்பணமாக கொடுத்திருந்தார். மீதி ரூ.50000/– கொடுத்து கிரயம் பெறுவதாக கூறியிருந்தார். பிரதிவாதிக்கு கால் உடைந்துவிட்டது, அதனால் கிரயத்திற்கு வரமுடியாது என்று கூறிவிட்டார். அதன்பிறகு பலமுறை அழைத்தும் பிரதிவாதி வரவில்லை. அதனால் என் கணவர் கொடுத்த பணத்தை திருப்பி கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

என் கணவர் 12.5.2015 அன்று கடன் கொடுத்துவிட்டு அதற்கு ஆதரவாக ஒரு பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த கடன் பத்திரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. என்னிடம் சொல்லிவிட்டுதான் சென்றார். வா.சா.ஆ.1 ல் நான் சாட்சி கையெழுத்தோ என் பெயரோ அதில் இடம் பெறவில்லை என்றால் சரி. என் கணவர் பிரதிவாதிக்கு எவ்வளவு பணம் கொடுத்தார் என்றும் எவ்வளவு பணம் திரும்ப பெற்றார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. என்னிடம் சொல்லிவிட்டுதான் பணம் கொடுப்பார்.

5.6.2016ல் என் கணவர் உயிருடன் இருக்கும்போது பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு பற்றி தெரியுமா என்றால் தெரியும். அதற்கு பிரதிவாதி 24.6.2016ல் ஒரு பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் அதுபற்றி தெரியாது. வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையை படித்து பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

என் கணவருக்கு, பிரதிவாதி 24.6.2016ல் கொடுத்த பதில் அறிவிப்பில் ரூ.6,00,000/– மட்டும் கடனாக பெற்றுள்ளதாகவும் அதில் ரூ.3,00,000/– ஏற்கனவே செலுத்திவிட்டதாகவும் மீதி ரூ.3,00,000/– ஐ பணத்தை திருப்பி கொடுகக தயாராக இருப்பதாகவும் அதை பெற்றுக்கொண்டு பத்திரத்தை திருப்பி கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருந்தார் என்றால் சரியல்ல. என் கணவர் வட்டி தொழில் செய்து வந்தார் என்றும் கடன் கொடுத்து வட்டியுடன் பணத்தை பெறுவதுதான் என் கணவரின் வழக்கம் என்றால் சரியல்ல. கடனுக்கு ஆதுரவாக மட்டுமே இந்த பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டது என்றும், அதில் பாதி பணத்தை செலுத்திவிட்டார் என்றும் மீதி பணத்தை செலுத்த பிரதிவாதி தயாராக இருக்கிறார் என்றால் சரியல்ல. நான் சொன்னபடி ரூ.6,00,000/– பிரதிவாதி செலுத்த வேண்டி இருந்தால் அதைபற்றி பதில் அறிவிப்பிலேயே சொல்லியிருப்பார் என்றால் சரியல்ல. பிரதிவாதி மீதி பணமான ரூ.3,00,000/–ஐ கொடுக்க தயாராக இருக்கிறார் என்றும் அந்த பணத்தை பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.1

ஒப்பந்த பத்திரத்தை நான் ரத்து செய்து கொடுக்க வேண்டியது என் கடமை என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.